# குளித்தலை நகராட்சி

2023ஆம் வருடம் அக்டோபர் மாதம் 31ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்-01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.நா.நந்தகுமார் அவர்களின் 30.08.2023, 31.08.2023ஆம் தேதிகள் மற்றும் செப்டம்பர்-2023ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.க.கார்த்திக் அவர்களின் 30.08.2023, 31.08.2023ஆம் தேதிகள் மற்றும் செப்டம்பர்-2023ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-03. குளித்தலை நகராட்சியில் பணிபுரியும், கீழ்க்கண்ட விபரப்படியான தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு 2023-2024ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்குவதற்கு, அரசு சார்பு நிறுவனமான கோ-ஆப் டெக்ஸ், கரூர் நிறுவனத்தின்மூலம் வாங்கி வழங்கவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ.1) துறை, அரசாணை நிலை எண்.168, நாள்-16.11.2015.ன்படி, தையல்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | தூய்மை பணியாளர்கள் (ஆண்-22, பெண்-8) | 30 |
| 2) | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் (ஆண்கள்) | 3 |
| 3) | ஓட்டுநர்கள் | 5 |
| 4) | அலுவலக உதவியாளர்கள் | 3 |
| | மொத்தம் | 41 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டுக்கான வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1619/2023/எச்1)

பொருள்-04. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் இந்நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள கடம்பர்கோவில் நடுநிலைப்பள்ளியில், மாண்புமிகு தமிழக முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் சமையல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. சமையல் கூடத்திற்கு வர்ணம் பூசுதல், மின் பணி செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகையை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1183/2023/இ1)

பொருள்-05. அரசாணை எண்.337, நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல்(MA-IV) துறை, நாள்-16.06.2023ன்படி, கோவிட்-19 தொற்றுநோய் காலக் கட்டத்தில், குத்தகை இனங்கள் மற்றும் ஆண்டுக் குத்தகை இனங்களுக்கான உரிமத் தொகையில் (01.06.2020 முதல் 31.08.2020 வரை (முதலாவது தள்ளுபடி) மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை (இரண்டாவது தள்ளுபடி) தள்ளுபடி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குளித்தலை நகராட்சியின் குத்தகை இனங்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படியான மாதங்களுக்குரிய கேட்புத் தொகையினை நீக்கம் செய்யப்படும் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | காலம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | ஜுன்-2020 முதல் ஆகஸ்ட்-2020 வரை (மூன்று மாதங்கள்) | 972132.00 |
| 2) | மே-2021 முதல் ஜுன்-2021 வரை (இரண்டு மாதங்கள்) | 612736.00 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் பதிவு செய்யலாம்.
2). அரசாணையின்படி தள்ளுபடி செய்யப்படும் தொகை மற்றும் GST தொகையினை கணனி கேட்பிலிருந்து நீக்கம் செய்வதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1769/2020/அ1)

பொருள்-06. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.9192/2022/SBM-1, நாள்-21.08.2023 உத்தரவிற்கிணங்க குளித்தலை நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 2023-2024 திட்டத்தின்கீழ் 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவுநீர் வாகனம் (Cesspool Tanker) கொள்முதல் செய்ய ரூ.43.25 இலட்சத்திற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் மத்தியஅரசு நிதி ஒதுக்கீடு ரூ.21.63 இலட்சம், மாநில அரசு நிதி ஒதுக்கீடு ரூ.14.27 இலட்சம் மற்றும் இந்நகராட்சி நிதி ஒதுக்கீடு ரூ.7.35 இலட்சம் என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.743/2023/இ1)

பொருள்-07. குளித்தலை நகராட்சி சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2023-2024ஆம் ஆண்டில் பரிந்துரை செய்த பணிக்கு திட்ட இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/5536/2023, நாள்-04.09.2023-ல், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | தெற்கு மணத்தட்டை பகுதியில் ரயில்வேகேட் முதல் அங்காளம்மன் கோயில் வரை (கொங்கஞ்சி ரோடு) புதிய தார்சாலை அமைத்தல் (550மீட்டர்) – 083001R172 | 15.00 இலட்சம் |
| 2 | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து வெளியே செல்லும் வழியில் வளைவு அமைத்தல் | 17.00 இலட்சம் |
| 3 | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து உள்ளே செல்லும் வழியில் வளைவு அமைத்தல் | 7.00 இலட்சம் |
| 4 | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் புதிய பயணியர் நிழற்குடை அமைத்தல் | 6.00 இலட்சம் |

எனவே, மேற்கண்ட பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1566/2023/இ1)

பொருள்-08. அரசாணை நிலை எண்.43-க்கிணங்க குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்ட,த்தின்கீழ் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பள்ளி நாட்களில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளியில் உணவு பரிமாறும் நபர் ஒருவருக்கு மாதம் ரூ.1500/- வீதம் (100 மாணவ, மாணவியருக்கு உணவு பரிமாறும் பணியாளர் ஒருவர் வீதம்) கல்வி நிதியின்கீழ் மதிப்பூதியம் (ஆறு நபர்கள்) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் தொகை வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினம் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.480/2023/இ1)

..4..

பொருள்-09. குளித்தலை நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவந்த வாகனம், கழிவு நீக்கம் செய்யப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி 30.08.2023 புதன்கிழமை அன்று பொது ஏலம் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படியான வாகனத்தினை திரு.ஞானேஸ்வரன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். எனவே, உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகனத்தின் எண் மற்றும் விவரம் | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Ashok Leyland Ltd ley cargo 759 Sewage Tanker TN-47 F1522 | 42,500/- |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் ஏற்கலாம்.

2). மேற்கண்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை கோரிய திரு.ஞானேஸ்வரன் என்பவருக்கு, மேற்கண்ட வாகனத்தினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2702/2018/இ1)

பொருள்-10. நகராட்சி நிர்வாகம், நகர்ப்புறம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் வாய்மொழி உத்தரவில் குளித்தலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, கடம்பர் கோவில் எதிர்புறம் வடக்கு மடவாள தெருவில் பொதுபணித்துறைக்கு சொந்தமான தென்கரை வாய்க்காலில் அமைந்துள்ள பாலம் மற்றும் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மேற்கண்ட பாலத்தினை அப்புறப்படுத்தி புதிய பாலம் அமைக்கவும் மற்றும் சாலை மேம்பாட்டு பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அரசிடம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின்உத்தவிற்கிணங்க மேற்கண்ட பணிக்கு மண்பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம் என்பதால் அதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1730/2023/இ1)

பொருள்-11. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணாநகர் புறவழிச்சாலையில் நான்கு இடங்களில் புதிதாக பாலங்கள் அகலப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.4.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1244/2023/இ1)

பொருள்- 12. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட தேவதானம் நகராட்சி துவக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் பணிகள் செய்துதரகோரி தலைமை ஆசிரியர், தேவதானம் துவக்கப்பள்ளியில் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி தேவதானம் நகராட்சி துவக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் | 10.00 இலட்சம் |

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1561/2023/இ1)

பொருள்- 13. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட மணத்தட்டையில் குளித்தலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுமார் 122 மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் பணிகள் செய்துதரகோரி தலைமை ஆசிரியர், மணத்தட்டை குளித்தலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள மணத்தட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதியதாக கழிவறை அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் | 16.00 இலட்சம் |

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1562/2023/இ1)

..6..

பொருள்- 14. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட மாரியம்மன் கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுமார் 500 மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் பணிகள் செய்து தர கோரி தலைமை ஆசிரியர் மாரியம்மன் கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளி அவர்களிடம் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள மாரியம்மன்கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதியதாக கழிவறை அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் | 19.00 இலட்சம் |

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1563/2023/இ1)

பொருள்- 15. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட கடம்பர்கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுமார் 200 மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் பணிகள் செய்து தர கோரி தலைமை ஆசிரியர், விண்ணப்பம் அளித்துள்ளார்.

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள கடம்பர்கோவில் நகராட்சி நடு நிலைப்பள்ளியில் புதியதாக கழிவறை அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் | 18.00 இலட்சம் |

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1564/2023/இ1)

பொருள்-16. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான மினிடிராக்டர் முன்பக்கெட், ஹைட்ராலிக் தொட்டி, அமைக்க வேண்டி உள்ளது. மேற்கண்ட மினிடிராக்டர் சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சம் ஆகும். பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1484/2023/இ1)

பொருள்-17. குளித்தலை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் குறித்த விளம்பரம் தொழில் மலர் 2023 (மாலை முரசு) புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. கீழ்க்கண்ட விவரப்படியான பட்டியல் தொகை ரூ.15,750/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | நாளிதழ் பெயர் | ஆவணம் எண். | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை முரசு | TM/23-24/AD01354 | 15,750/- |

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினம் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1115/2021/இ1)

பொருள்-18. அரசாணை நிலை எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ2)துறை, நாள்-14.10.2022இல் குளித்தலை நகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படியான 905 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்ற ரூ.125.35 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | LED விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 வாட்ஸ் | 13 |
| 2 | 40 வாட்ஸ் | 82 |
| 3 | 70 வாட்ஸ் | 810 |
| | மொத்தம் | 905 |

மேற்கண்ட SUIDF திட்டத்தின்கீழ் 905 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்ற ரூ.125.35 இலட்சம் நிதி Tamilnadu Urban Finance and Infrastructure Development Corporation Limited (TUFIDCO) நிறுவனத்தின் கடனாக பெற்று 5% வட்டியுடன் 6 வருட காலத்திற்குள் செலுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை கடனாக பெற்று செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1634/2022/இ1)

பொருள்- 19. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர் மற்றும் நாப்பாளையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு Gas Chlorination முறையினை செயல்படுத்திட நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு Gas Chlorination முறையினை செயல்படுத்திடல் | 11.25 இலட்சம் | M/S. Shrineketha Enterprises, | 0.01% குறைவு |
| | | | M/S. I Tech Systems, Erode | 5.48% குறைவு |
| 2. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட நாப்பாளையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு Gas Chlorination முறையினை செயல்படுத்திடல் | 11.25 இலட்சம் | M/S. Shrineketha Enterprises, | 0.01% குறைவு |
| | | | M/S. I Tech Systems, Erode | 5.48% குறைவு |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக வரப்பெற்ற M/S. ITech Systems, Erode நிறுவனத்தின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1103/2023/இ1)

பொருள்- 20. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட கடம்பர்கோவில் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமையற் கூட்டத்தின் முன்புறம் பேவர்பிளாக் அமைத்தல் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட கடம்பர்கோவில் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமையற் கூட்டத்தின் முன்புறம் பேவர் பிளாக் அமைத்தல். | 4.90 இலட்சம் |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.480/2023/இ1)

பொருள்- 21. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் வாய்மொழி உத்தரவிற்கிணங்க குளித்தலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, கடம்பர் கோவில் எதிர்புறம் வடக்கு மடவாள தெருவில் அமைந்துள்ள பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேற்கண்ட பாலத்தினை அப்புறப்படுத்தி புதிய பாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து அரசிடம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேற்கண்ட பணிக்கு உடன் மண் பரிசோதனை எடுக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படியான நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ. எண் | பணி விவரம் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் கடம்பர் கோவில் எதிர்புறம் வடக்கு மடவாள தெருவில் புதிய பாலம் அமைத்தல் பணி | SSS Constructions No.214/2, Erode road, Reddipalayam, Karur 639002. | 1,20,000/- |
| | | Jananam Designers & Builders No 11, Shri Sakthi complex, Pazhani bye pass, Dindigul 624 001. | 1,70,000/- |
| | | SS Builders. 8/9, South Street, Thethupatti, Dindigul 624 705. | 1,80,000/- |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற SSS Constructions, Karur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினம் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1730/2023/இ1)

பொருள்- 22. குளித்தலை நகராட்சிக்கு NUHM-2023-2024 திட்டத்தின்கீழ் புதிய நகர்ப்புற சுகாதார துணை மையம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நாளினை கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழ் நிறுவனத்திற்கு தொகை வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | மாலை தமிழகம் | 27406/- |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1518/2023/இ1)

பொருள்- 23. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர் மற்றும் நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு Gas Chlorination முறையினை செயல்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நாளினை, கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழ் நிறுவனத்திற்கு தொகை வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | தினசூரியன் | 9975/- |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1103/2023/இ1)

பொருள்- 24. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி பணிகள் முடிவுற்றது. இந்நிலையில், பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் வந்து செல்லும் வழியின் குறுகலான மையப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள காந்தி சிலையை அகற்றி, பேருந்து நிலையத்தில் உயர்கோபுர மின் விளக்கு அமைந்துள்ள இடத்தில் அல்லது சுங்ககேட் ரவுண்டானா உயர்கோபுர மின் விளக்கு அமைந்துள்ள இடத்தில் அல்லது வேறு மாற்று இடத்தில் மாற்றியமைக்க நகர்மன்றத் தீர்மானம் எண்.182, நாள்-31.07.2023ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது உள்ள காந்தி சிலையை அகற்றி, பேருந்து நிலையத்தின் மையப் பகுதியில் உள்ள உயர்கோபுர மின்விளக்கின்கீழ் பகுதியில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3). போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன்கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் செய்திட நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1428/2023/இ1)

பொருள்- 25. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, கழிவு நீர் தரத்தினை பரிசோதனை செய்ய பத்து இடங்களில் எடுக்கப்பட்டு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், கரூர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட பரிசோதனைக்கு பட்டியல் தொகை ரூ.25,075/- வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1680/2023/இ1)

பொருள்- 26. குளித்தலை நகராட்சி பொது சுகாரப்பிரிவு வாகனம் TN-47-X-0031-ற்கு தகுதிச்சான்று பெறும் பணிக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.166, நாள்-29.05.2023ல் அனுமதிக்கப்பட்டதின்பேரில், 06.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணிமனை விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (GST உட்பட) |
|---|---|---|
| 1) | JVK Auto Diesel Works,<br>279/28-J. J.V.K.Campas,<br>Kalarampatty Mainroad, Salem – 636 015. | ரூ.119180/- |
| 2) | Lakshmi Auto Diesel Works,<br>Workshop Corner, Salem Mainroad,<br>Mettur Dam – 636 401. | ரூ.109740/- |

அலுவலக குறிப்பு- 1). மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த அளவிலான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர்டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3). அரசு அனுமதித்த செலவினத்தைவிட கூடுதல் ஆகும் செலவினத்திற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.469/2022/எச்1)

பொருள்- 27. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்லும் வழியில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள காந்தி சிலையை பேருந்து நிலையத்தின் உட்புறம் உள்ள உயர்கோபுர மின்விளக்கிற்குகீழ் மாற்றி அமைக்க நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் போக்கு வரத்துக்கு இடையூறாக உள்ள காந்தி சிலையை பேரு ந்து நிலையத்தின் உட்புறம் உள்ள உயர்கோபுர மின் விளக்கிற்குகீழ் மாற்றி அமைக்கும் பணி | திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை | 0.10% |
| | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.68% |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.எம்.செந்தில்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1428/2023/இ1)

பொருள்-28. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் கீழ்க்கண்ட பணிகளுக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில், 10.10.2023ஆம்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் Vetmix (ம) தற்காலிக சுற்றுசுவர் அமைக்கும் பணி | 6.50 | திரு.R.A.குழந்தைவேல், மணப்பாறை | 0.08% குறைவு |
| | | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை | 1.59% அதிகம் |
| 2) | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் Kerbwall (ம) பேவர் பிளாக் அமைக்கும் பணி | 8.70 | திரு.R.A.குழந்தைவேல், மணப்பாறை | 0.13% குறைவு |
| | | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை | 0.80% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகைக்கு குறைவாக வரப்பெற்ற திரு.R.A.குழந்தைவேல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.397/2023/இ1)

பொருள்-29. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வடக்கு முத்துராஜா தெருவில் (கரூர்-திருச்சி சாலை தென்புறம்) உள்ள பொது கழிப்பிடத்தில் உள்ள ஆழ்துளை கிணறு தூர்ந்து போய்விட்ட காரணத்தினால் பொதுமக்களின் நலன் கருதி புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து பழுதடைந்த மின்மோட்டாரை சரிசெய்யவும் இதர பணிகள் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1507/2023/இ1)

பொருள்- 30. குளித்தலை நகராட்சியில் பொதுமக்களுக்கு தேவையான தினசரி குடிநீர் விநியோகம் செய்தல், இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பராமரித்தல், குழாய் பைப்புகளின் உடைப்பு சரிசெய்தல், கைப் பம்புகள் பராமரிப்பு, மினி சின்டெக்ஸ் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆணைப்படி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள 18 நபர்கள் என தெரிவிக்கப்பட்டது. இந்நகராட்சியில் மேற்கண்ட பணிக்கு மூன்று நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். மீதம் 15 நபர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு 12நபர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணி நலன்கருதி பணியாளர்கள் மிகவும் அவசியம் தேவைப்படுவதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவு வரும் வரை பணியினை தொடரவும், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலைவிகிதப் பட்டியல் அடிப்படையில் பணியாளர்கள் சுயஉதவிக்குழுமூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது. மேலும்EPF, ESIC, EDLI பயன்களுடன் பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1515/2023/இ1)

பொருள்- 31. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்மன்ற அனுமதி பெற்று புது கழிப்பிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட கழிப்பிடத்திற்கு மீதமுள்ள பணிகள் Tiles, வர்ணம் பூசுதல், மின்சார பணிகள் மற்றும் இதர மராமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1826/2020/இ1)

பொருள்- 32. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பரிசல்துறை சாலையில் உள்ள பெரியார் நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பாலத்தின் தூண்கள் மண்அரிப்பினால் சேதமடைந்துள்ளது. அதனை சரி செய்து மேற்கண்ட இடத்தில் தாங்கு சுவர் அமைக்க உத்தேச செலவினம் ரூ.2.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1799/2023/இ1)

..14.

பொருள்- 33. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 பாலாஜிநகர் பூங்காவில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பணிமேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. மேற்கண்ட பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மண்நிரப்பி சமன்செய்தல் மற்றும் விளையாட்டு சாதனங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1818/2023/இ1)

பொருள்- 34. குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் மின்தடை ஏற்படும் பட்சத்தில் மின்மாற்றியினை தானியங்கி முறையில் இயங்கிட Auto kid Generator வாங்கிடவும்,மற்றும் 200 எண்ணிக்கை பழைய LED தெருவிளக்குகளை பழுதுநீக்கம் செய்து Schynell Energy Equipment நிறுவனத்திற்கு ஒப்படைக்க உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1661/2023/இ1)

பொருள்- 35. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட தேவதானம் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் நீர்சேகரம் செய்வதற்கான தொட்டி அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு உண்டாகும் செலவினம் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1485/2023/இ1)

பொருள்- 36. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பரிசல்துறை சாலையில் உள்ள பெரியார் நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளது, அதனை சரி செய்திடவும் பம்ப் சர்வீஸ் மற்றும் காயல் கட்டுதல் பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1791/2023/இ1)

பொருள்- 37. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்களம் உரக்கிடங்கில் 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின்கீழ் புதியதாக குப்பை அரைக்கும் இயந்திரம், பேப்பர் கட்டும் இயந்திரம் போன்ற இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திரங்களை இயக்குவதற்கு மின்சார அறையில் இருந்து கேபிள் மூலம் மின் இணைப்பு கொடுக்க மின்சாமான்கள் வாங்கவும், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் LED விளக்குகள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1440/2023/இ1)

பொருள்- 38. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுக்கழிப்பிடம் மற்றும் ஆழ்துளை கிணறு இவைகளில் மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், வயரிங் சம்பந்தமான மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, மின்மோட்டார்கள் மற்றும் இதர பொருட்களை உடனுக்குடன் மாற்றம் செய்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கத்திலும் அவசர அவசியம் கருதி ஓராண்டிற்கு ரூ.4.75 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1701/2023/இ1)

-------------------

**குளித்தலை நகராட்சி**

**குளித்தலை நகர்மன்றத்தின் 31.10..2023ஆம் தேதிய**

**சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 229 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 230 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 231 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 232 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 233 | ஏற்கப்பட்டது. |
| 6 | 6 | 234 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 235 | பதிவு செய்யப்பட்டது. |
| 8 | 8 | 236 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 237 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 238 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 239 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 240 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 241 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 242 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 243 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 244 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 245 | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 246 | பதிவு செய்யப்பட்டது. |
| 19 | 19 | 247 | அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 20 | 248 | அனுமதிக்கப்பட்டது. |
| 21 | 21 | 249 | அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 22 | 250 | அனுமதிக்கப்பட்டது. |
| 23 | 23 | 251 | அனுமதிக்கப்பட்டது. |
| 24 | 24 | 252 | அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 25 | 253 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 254 | அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 255 | அனுமதிக்கப்பட்டது. |
| 28 | 28 | 256 | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | 29 | 257 | ஏற்கப்பட்டது. |
| 30 | 30 | 258 | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 31 | 31 | 259 | அனுமதிக்கப்பட்டது. |
| 32 | 32 | 260 | அனுமதிக்கப்பட்டது. |
| 33 | 33 | 261 | அனுமதிக்கப்பட்டது. |
| 34 | 34 | 262 | அனுமதிக்கப்பட்டது. |
| 35 | 35 | 263 | அனுமதிக்கப்பட்டது. |
| 36 | 36 | 264 | அனுமதிக்கப்பட்டது. |
| 37 | 37 | 265 | அனுமதிக்கப்பட்டது. |
| 38 | 38 | 266 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,

நகர்மன்றத் தலைவர்,

குளித்தலை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர்,

குளித்தலை நகராட்சி.